
தாமாகவே சிறந்தது எனவும்



"சொலிட்"
பம்பையே வாங்குங்கள்


# உதயன்



உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 2-00

ஏடு: 3 யாழ்ப்பாணம் விலை ஏடு வைகாசி 31 திங்கட்கிழமை கலியுகம் 1408 ஷவ்வால் 27 (13-6-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ்: 104



WHEN ONLY THE BEST IS GOOD ENOUGH



BY Solide Pumps


# நயினாதீவில் அமைதிப்படை

# ஸ்ரீலங்கா கடற்படைக்கு பதிலாக

## நாகபூஷணி உற்சவத்தை முன்னிட்டு பாதுகாப்பு மற்றும் சோதனைகளைச் செய்து உதவுவதற்கு

— அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், ஜூன் 13

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி, இதுவரை ஸ்ரீலங்கா கடற்படையினர் செய்த பணிகளை இந்திய அமைதிப்படையினரே செய்ய உள்ளனர்.

கடற் போக்குவரத்து, பயணிகள் சோதனை, பாதுகாப்பு ஆகியவற்றில் பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் போக்கும் விதத்திலும்-

கடற்படை இறங்குதுறையைத் தவிர்த்து, கோவில் இறங்குதுறையில் கடமையில் ஈடுபட ஸ்ரீலங்கா கடற்படையினர் மறுத்ததைத் தொடர்ந்துமே- இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய அமைதிப் படையினர் நயினாதீவு சென்றுள்ளனர்.

இவர்களே இவ்வருட உற்சவம் முடியும்வரை ஸ்ரீலங்கா கடற்படையினர் ஆற்றிய பணிகளைச் செய்வர்.

இதுவரை காலமும் நயினாதீவுக்குச் செல்லும் மக்கள், ஸ்ரீலங்கா கடற்படை இறங்குதுறையில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

நாளை 14ஆம் திகதியிலிருந்து இந்திய அமைதிப் படையினர் பயணிகளை நயினாதீவு ஆலய இறங்குதுறையில் வைத்தே சோதனைக்குட்படுத்தி அனுமதிப்பர். இரண்டாவது முறை சோதனை இருக்கமாட்டாதெனவும் அறியவருகிறது. ஆனால் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

பக்தர்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும், யாழ். செயலக பொதுசனத் தொடர்பதிகாரி திரு. ரி. குலசேகரமும் மேற்கொண்ட முயற்சியினாலேயே இந்திய அமைதிப் படையினர் இப்புதிய நடைமுறைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஸ்ரீலங்கா கடற்படை இறங்குதுறையில் வைத்துச் சோதனைக்குட்படுத்தப்படுவதனால் அதிக நேரம் விரயமாவதுடன் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களையும் அனுபவித்து வந்தனர். குறிப்பாக முதியவர்கள், நோயாளிகள், குழந்தைகள் பல கஷ்டங்களை

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



கோயில் சீசன் என்டால் எக்கச்சக்கமாய் விலை ஏத்திப் பாவம் தேட வேணுமே......!

## குருநகர்ப் பகுதியில் 10 பெரிய படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி

குருநகர், ஜூன் 13

குருநகர்ப் பகுதியில் நாளொன்றுக்கு பத்துப் பெரிய இயந்திரப் படகுகளுக்கு மீன் பிடிக்க இந்திய அமைதிப் படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சம்பவங்களின் பின்னர் இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

பின்னர் சிறிய படகுகளில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டது.

எனினும் சில தினங்களுக்கு முன்னர் ஐந்து பெரிய இயந்திரப்படகுகளுக்கு மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டது.

இப்பொழுது ஐந்து படகுகளிலிருந்து பத்துப் படகுகளாக எண்ணிக்கை அதிகரித்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-51)

## அனுமதிபெறாது கால்நடைகளை இங்கு கொண்டுவரத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 13

வெளியிடங்களிலிருந்து அனுமதி பெறாமல் கால்நடைகளை யாழ் குடாநாட்டிற்குள் கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த தடையை அமுல்படுத்த குடாநாட்டின் எல்லாக் கிராமங்களிலுமுள்ள கிராமசேவகர்களும் பொதுஸ்தாபனங்களும் உதவ வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய கால்நடை உற்பத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ். பாலச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக வட்டக்கச்சியில் நிர்வாகம் சீரற்றிருக்கிறது. இதனால் வெளியிடங்களிலிருந்து குடாநாட்டிற்குள் ஏராளமான கால்நடைகள் கொண்டுவரப்படுகின்றன. உரிய அனுமதியோ பரிசோதனைகளோ எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக இங்கு கால்நடைகளுக்கு தொற்று நோய்கள் பரவ ஏதுவாகின்றது.

எனவே சட்டவிரோதமாக கால்நடைகள் கொண்டுவரப்படுவது தடைசெய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதற்கு குடாநாட்டிலுள்ள எல்லாப் பகுதி கிராமங்களைச் சேர்ந்த கிராமசேவகர்களும், பொதுஸ்தாபனங்களும் முன்வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-9)

## தென் மாகாணத்தில் இராணுவம் நிலைகொள்ளும்

### ஜெனரல் ரணதுங்கா தகவல்

கொழும்பு, ஜூன் 13

தென் மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இராணுவம் தொடர்ந்து அங்கேயே தங்கியிருக்கும் என்று கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

தென் மாகாண சபைத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்புக்கு அனுப்பப்பட்ட படையினர் மட்டுமே கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்படுவர் என்றும்-

ஏனைய படையினர் திருப்பி அழைக்கப்படமாட்டார்கள் என்றும் ஜெனரல் ரணதுங்கா தெரிவித்தார்.

பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பவரைக் கண்டதும் சுடும் உத்தரவு, தென் மாகாணத்தில் உள்ள படையினருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார். (ஒ-ா)

## நிலக்கண்ணி மீட்பு

கடந்த வியாழன்று வடமராட்சி கிழக்கில் இந்திய அமைதிப் படையினர் நிலக்கண்ணி ஒன்றை மீட்டெடுத்தனர்.

புதுக்காட்டுச் சந்திக்கும் மருதங்கேணிக்கும் கோவிலுக்கும் இடையே குறிப்பிட்ட கண்ணிவெடி மீட்கப்பட்டதாக தெரியவருகிறது.

இச்சம்பவத்தை அடுத்து புதுக்காடு, மருதங்கேணிப் பகுதிகள் வெள்ளி-கிழமை ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. ஒ-51

## கடலில் வயோதிபரின் சடலம்

வேலணை, ஜூன் 13

நயினாதீவு - குறிகாட்டுவானுக்கு இடைப்பட்ட கடலில் 65 வயது மதிக்கத்தக்க ஓர் ஆணின் சடலம் மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இறந்தவர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயச் சூழலில் திரிந்தவரென்றும், சண்டிலிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்தவரென்றும் தெரியவருகிறது. (ஒ-167)

## பாவனையாளர் அங்கலாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் பகுதியில் மாசற்ற அதி உச்ச விலையில் விற்கப்படுகின்றன.

இதனால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது "கோயில் சீசன்" என்பதாலேயே இந்த விலையேற்றம் எனக் கூறப்படுகிறது.

இப்படியான தருணத்தில் வியாபாரிகள் நீதியாக நடந்து கொள்ள வேண்டும் என ஒரு பாவனையாளர் அங்கலாய்த்தார். [ஒ]

## தென்னிலங்கை வன்செயல்களால் 10 கோடி ரூபாவுக்கு சேதம்

கொழும்பு, ஜூன் 13

தென் இலங்கையில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற வன்செயல்களினால் அரசாங்கச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் 10 கோடி ரூபாவுக்கு மேல் என்று அரசு வட்டாரங்கள் மதிப்பிட்டுள்ளன.

அரசு போக்குவரத்துச் சபைக்கு மட்டும் ஒன்றரைக் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

ரயில்வே பகுதிக்கு 5 கோடி நட்டம் ஏற்பட்டது என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை தென் மாகாணத்தில் வன்செயல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. கடந்த சனிக்கிழமை அதிகாலை நான்கு மின்சார ட்ரான்ஸ்போமர்கள் சேதப்படுத்தப்பட்டன.

ஹினிதும, உடுகம்பளை, பிலியந்தலை ஆகிய இடங்களிலும் ட்ரான்ஸ்போமர்கள் சேதப்படுத்தப்பட்டன.

செல்லக்கதிர்காமத்திலும் அதிசக்தி வாய்ந்த ட்ரான்ஸ்போமர் இனந்தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-ா)

## மன்னாரில் நாளை ஈரோஸ் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

உடனடி அமைதி, இதயசுத்தியான பேச்சுவார்த்தை என்பவற்றை வலியுறுத்தி நாளை 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னாரில் ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அகிம்சைப் போராட்டங்கள் நடத்தும்.

ஈரோஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

"உடனடி அமைதி" கோரி ஈழப் புரட்சி அமைப்பினால் கடந்த 6ஆம் திகதி அடையாள மாகச் சுன்னாகத்திலும், கடந்த 11ஆம் திகதி மூல்லைத்தீவிலும் விதிமறியல், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்பேசும் மக்களின் இன்றைய நெருக்கடிநிலை மாறவேண்டுமாயின் இந்திய அமைதிப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை மூலம் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் அமைதியான சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதையே அனைவரும் விரும்புகின்றார்கள். இதனைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்.-வவுனியா ரயில் இணைப்பு பஸ் சேவை ஒழுங்காக நடக்கிறது

### அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணத்திற்கும், வவுனியாவிற்கும் இடையிலான ரயில் இணைப்பு பஸ் சேவை தற்பொழுது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் மிகவும் ஒழுங்காக மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

காலை 5-30 மணி முதல் 7-00 மணி வரை யாழ். பஸ்நிலையத்திலிருந்து புறப்படும் பஸ்கள் உரிய நேரத்தில் வவுனியாவை அடைகின்றன.

இதனால் பயணிகள் ரயிலைத் தவறவிடாமல் பயணத்தைத் தொடரமுடிகின்றது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான இணைப்பு பஸ் சேவையும் தடையின்றி நடைபெறுகின்றது.

இவ்வாறு அவர் மேலும் கூறினார். (ஒ-5)

### சுபநேரம்

13—6—1988
வைகாசி 31
திங்கட்கிழமை

சுபநேரம்:
11 53 முதல் 1.23 வரை

ராகுகாலம்:
7 23 முதல் 8.53 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அந்தோனியார் திருநாள்

## முல்லைத்தீவில் நடந்த பொதுக்கூட்டம் தடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 13

கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை முல்லைத்தீவில் ஈரோஸ் இயக்கத்தினால் எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக நடத்தப்பட்ட பொதுக்கூட்டம் இடைநடுவில் தடுக்கப்பட்டதாக ஈரோஸ் இயக்கப் பிரமுகர் ஒருவர் குறை கூறினார்.

அச்சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

11 ஆம் திகதி காலை முல்லைத்தீவு ஆதிவைரவர் கோவிலடியில் ஆரம்பித்த ஊர்வலம் பஸ் நிலையத்தை வந்தடைந்தது. அதிக எண்ணிக்கையான மக்கள் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலமாக வந்தடைந்த மக்கள் மத்தியில் முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர்.

உடனடி யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றை வலியுறுத்தியே அனைவரும் பேசினர்.

சந்திரசேகரி என்பவர் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் கூட்டத்தினரை சுற்றிவளைத்த அமைதிப் படையினர் கூட்டத்தில் உரைநிகழ்த்தியவர்களை முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

பேலும் முல்லைத்தீவு ஈரோஸ் பிரமுகர் பொன் என்பவரையும், முத்து சுப்பிரமணியம் என்பவரையும் முகாமிற்குவரும்படி கேட்டுக்கொண்டனர்.

அங்குசென்ற இருவரையும் தனி அறையில் வைத்து விசாரணை நடாத்தினர்.

மாலை 6 மணியளவில் முத்துசுப்பிரமணியம் தவிர்ந்த ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை 11 மணி வரை முத்துசுப்பிரமணியம் விடுவிக்கப்படவில்லை. (ஒ-5)

## அம்பாந்தோட்டையில் சனியன்று தாக்குதல்!

### ஆயுதங்கள் அபகரிப்பு!

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள மகாவலி அபிவிருத்தித் திட்ட அலுவலகத்தின் மீது தீவிரவாதிகள் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

அலுவலகக் காவலர் இரண்டு பேர் அப்போது காயமடைந்தனர்.

அலுவலகத்தில் இருந்து 2 ரிப்பீட்டர் துப்பாக்கிகள், 10 ஷொட்கன்கள் ஆகியவற்றை தீவிரவாதிகள் அபகரித்துச் சென்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தீவிரவாதிகளின் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் பலத்த தேடுதல்நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அம்பாந்தோட்டைப் பொலிஸார் தாக்குதல் சம்பவம் குறித்து தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-ா)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகலவிதமான T. V. பூஸ்ரர், அன்ரனா வயர், றேடியோ, றேடியோ உதிரிப்பாகங்கள் கைக்கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள் மின்விசிறிகள் சைனா மின் அடுப்புகள் T. V ஸ்ரான்ட் எவர் சில்வர் பொருட்கள் றைஸ்குக்கர் எலெக்ரிக் கேற்றில்களும் கரம் போட், விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் ரவலிங் பாக்ஸ், பாடசாலைபாக்ஸ் வாங்குவதற்கு நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C 5299)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின் ஹெசெற் சாப்பாட்டு மேசை, கதிரைகள், அலுமாரி, சோகேஸ், கண்ணாடி கைசெல்ப், மின்தொட்டி, Hot Plate Dinner Set, கிடாரம், கட்டில் மெத்தைகள், கண்ணாடி மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்கு. M தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் பற்றிக்ஸ் சந்தி அருகில்) (4388)

களிப்பாவிப்பிலுள்ள 88 Br C-90 மோட்டார் சைக்கிளும் 2'' Alcon நீர் இறைக்கும் இயந்திரமும் உடன் விற்பனைக்கு உண்டு அருள் ஆனந்தன் No 8. றெயில்வே ஸ்ரான்ட், ஸ்ரான்லி றோட் [ஆயுள் வேதக் கல் லூரிக்கு முன்னால்] [4217]

Sony 20'' 2020 Sony B/W 12'' National Video N.V 380 விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு S. T. L வீடியோ கிளப் No: 3, நவீன சந்தை மேல்மாடி திருநெல்வேலி, (4206)

புதிய கிஸ்கோ குக்கர் 4 காஸ் அடுப்புகள 2 எலெக்ரிக் பிளேற் எலெக்ரிக் கடிகாரம் நிமிடஎரமர் Automchc Ouen Timer உடன் விற்பனைக்குண்டு ரூபி மெமோரியல் ஒழுங்கை, மணிப்பாய். [4416]

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த புதிய ரங்குகள் விற்பனைக்கு வந்துவிட்டன. மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும் Business Promoters Pvt) LTD 198 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். [4223]

நவாலி அரசடிச் சந்தியிலிருந்து கல்லுண்டாய் போகும் வீதியில் 40 யார் தூரத்தில் இரு பக்க ஒழுங்கை கிணறு மின்சார வசதியுடன் கூடிய நிலப்பரப்பு 1½ முழுத் தோட்ட அளவுள்ள காணி விற்பனைக்குண்டு தொடர்பு தருமராசா வீரசிங்கம் கந்தரோடை வீதி சுன்னாகம் (4221)

சிவப்பு நிற Asia Bike விற்பனைக்குண்டு தொடர்பு 198 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு அண்மையில். [4220]

### விற்பனைக்கு வேலணையில்

வேலணை 5ம் வட்டாரத்தில் சிலுந்தா குளத்திற்கு அண்மையில் கிழக்கு பக்கமாக அமைந்த தோட்ட நிலம் விற்பனைக்குண்டு நல்லபாதை அமைப்பு மின்சார வசதி ஆகியன அமைந்து விவசாயம் செய்ய அல்லது வீடு கட்ட சிறந்த இடம் விபரங்களுக்கு திருமதி ப. நகுலேசபிள்ளை வேலணை-5 (4222)

### காணி விற்பனைக்கு

சித்தன்கேணிச் சந்தியிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் சங்கக்கடைக்கு அருகாமையில் றோட்டு முகப்புடைய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி மு. அருணாசலம் J P சித்தன்கேணி [4212]

Lohaman இன சிவப்பு முட்டையிடும் ஒரு நாள் கோழிக் குஞ்சு யூலை மாத முதல் வாரத்தில் விற்பனை செய்யப்படும் முன்கூட்டியே பதிவு செய்யப்படும். விபரங்களுக்கு M G. M For ge Stores 208 1st Cross st Jaffna [4218]

## தேவை

London பரீட்சைக்கு Accounts கற்பிப்பவர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் C/o 227, உதயன் (C 5405)

TYPEWRITERS தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane Power House Road, Jaffna (S my & Co Shabra அருகாமையில்) (C 5300)

பெய்ரூட் நாட்டிற்கு கண்ணாடித் தொழிற்சாலைக்கு 18 - 45 வயதுக்குட்பட்ட வேலையாட்கள் தேவை சம்பளம் 150 டொலர் 15 நாட்களில் பிரயாணம் பாஸ்போட் 7 படங்களுடன் உடனடியாக நேரில் வரவும், பாஸ்போட் இல்லாதவர்களுக்கு பாஸ்போட் செய்து கொடுக்கப்படும் தொடர்பு, Mrs P Danial "சிவஸ்தன்" மலாக்கம் சந்தி (4224)

கொழும்பில் கடமையாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. பழகியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மிக் மென் டென்றிஸ் 16 26/1 திருநெல்வேலி சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் காலை 8.00 மணி முதல் 9 00 மணிக்கும் இடையில் நேரில் வரவும் [4422]

லேலண்ட் பஸ் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக்கும் கேற் கிறில் வேலை செய்ய கூடியவர்களும் தேவை. தொடர்பு கொள்க சிவசிங்கம் மோட்டோர்ஸ் 25 மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம் [4216]

### பெயர் மாற்றம்

Name in Birth certificate Vijayathatu Legouri Francis என்னும் எனது பெயரை நான், இன்று தொடக்கம் Present Name: Vijayantthiran Legouri Francis என மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன். (C/5431)

### ராதையின் நெஞ்சம்

தீபகுள் விருது பெற்ற நாவலாசிரியர் K S ஆனந்தன் எழுதிய ''ராதையின் நெஞ்சம்'' காதல், சோகம், மர்மம், அத்தனையும் நிறைந்த புதுமையான நாவல் 200, பக்கங்கள் 30/- செங்கை ஆழியான் எழுதிய உண்மைக் கதை பழைய காலம் 20/- ரூபா பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் விரைவில் வெளிவருகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு கானகத்தின் கானம். (4219)

---

கொக்குவில் புதுக் கோவில் பரிபாலன சபை

## அதி முக்கிய அறிவித்தல்

மேற்படி கோவிலுக்கு சொந்தமான கடைகளில் வாடகைக்கிருப்போரை மாத வாடகைப் பணத்தை புதிய பரிபாலன சபையிடம் கொடுக்க வேண்டாமென்று சில தீய சக்திகள் வாடகைக்காரரிடம் கடித மூலமாகவும், நேரடியாகவும் தெரிவித்ததாக நாம் அறிகிறோம்.

தீய சக்திகளின் தூண்டுதலை தங்களுக்கு சாதகமாகப் பாவித்து கோவிலுக்கு சேர வேண்டிய வாடகை நிலுவைகளை செலுத்தத் தவறும் கடைக்காரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். ஆகையால் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் வாடகைக்காரர் யாவரும் கோவிற் கடைகளுக்குரிய வாடகை நிலுவைகளை 1988 ஆம் ஆண்டுக்காக கொக்குவில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட கோவிற்பரிபாலன சபையின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்

த. பொன்னம்பலம் தலைவர் — சி வி இராஜேந்திரம் பொதுக்காரியதரிசி (4404)

---

T. இந்திரநாதன்
M Three Travels
அளிக்கும்

# மத்திய கிழக்கு

## ★ வேலை வாய்ப்பு ★

எமது சேவை தூய்மையானது துரிதமானது

### ● உடனடி பிரயாண வாய்ப்புக்கள்

- ★ வைகாசி முற்பகுதியில் கடவுச் சீட்டு தந்த 80 பேர் 2-6-88ல் பிரயாணம் செய்துவிட்டார்கள்.
- ★ 23 5-88ன் பின் கடவுச்சீட்டு தந்தவர்கள் 8-6 88. 10 6-88ல் 523 பேர் பிரயாணம் செய்துவிட்டார்கள்.
- ★ என்னிடம் கடவுச் சீட்டுத் தந்தவர்கள் 43 பேர் இன்னும் 7 கிழமைகளில் பிரயாணம் செய்யப் போகிறார்கள்.
- ★ கீழ்காணும் வேலை வாய்ப்புகள் தற்சமயம் என்னிடம் உண்டு உடனடியாக கடவுச்சீட்டு. கடவுச்சீட்டு முன்பக்கப் பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும் 2 கிழமைகளில் பிரயாணம் எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.

[ ] சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| [1] | பராமரிப்பு கிளீனேர்ஸ் [Maintenance Cleaners] | 550 றியால் |
| [2 | கிளீனிங் கூலியாட்கள் [Cleaning Labourers] | 500 றியால் |
| [3] | கனரக வாகன சாரதிகள் Equipment Drivers | 800 றியால் |

21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
OPEN VISA [திறந்த விசா]

| | | |
|---|---|---|
| (1) | விவசாய மேற்பார்வையாளர் (Agricultural Supervisors) விவசாய கூலியாட்கள் (Agricultural Labourers | 500 றியால் |

(25 வயதுக்கு மேற்பட்டவர்கள்)

[II] குவைத் (Kuwait) பொது கிளீனேர்ஸ்

[[II] மத்திய கிழக்கு நாடுகளுக்கு House Maids [பணிப்பெண்கள்]

உங்களுக்கு சேவை செய்ய
திரு. T. இந்திரநாதன்
காத்திருக்கிறார்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

T. இந்திரநாதன்
M Three Travels
சோதி லேன், கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
டெலிபோன் வழி:- 763 764, 769. (C-5...)

---

## குமுதினி மீண்டும் இயங்கும் சாத்தியம்

நெடுந்தீவு ஜூன் 13

நீண்டகாலம் உறங்கிக் கிடந்த நெடுந்தீவு அரசாங்கப்படகு குமுதினி இப்போது விழித்தெழுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன

பழுதடைந்து கிடந்த இப்படகு திருத்தவேலைக்கெனக் கரையில் ஏற்றப்பட்டுள்ளது

அனேகமாக அடுத்த வாரம் குமுதினி மீண்டும் தனது சேவையைத் தொடரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. [இ-111]

## குடாநாட்டில் நாளாந்தம் விபத்துகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வாகன விபத்துகளால் தினமும் பத்துப் பேர் வரையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வாகன நெருக்கடிகள் காரணமாகவே தினமும் வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன

கடந்த வாரத்தில் மட்டும் வாகன விபத்துக்களினால் மூன்றுபேர் மரணமடைந்தும், பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர்.

இப்படிக் காயமடைவோரில் அதிகமானோர் இளம்வயதினர் என்பது குறிப்பிடத்தக்கது [ஓ-10]

---

திறன் ஆய்வு நிலையம் நடத்தும்

# 3 ஆவது A/L போட்டிப் பரீட்சை

| | | | | |
|---|---|---|---|---|
| 20-6-88 திங் | மு.ப 8.30 | Botany II | பி.ப 12. 30 | M C Q. |
| | மு.ப 8 30 | Applied I | பி ப 12 30 | Applied II |
| 21-6 88 செவ் | மு ப 8 30 | Physics II | பி.ப 12.30 | Physics I |
| 22 6 88 புதன் | மு.ப 8.30 | Zoology II | பி.ப 12 30 | Zoology I |
| | மு ப 8 30 | Pure I | பி ப 12 30 | Pure II |
| 30-6-88 வியா | மு ப 8 30 | Chemistry II | பி ப 12 30 | Chemistry I |

பரிசு வழங்கும் திகதி 6-7 88 புதன் 2. 30 p m

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு பாடத்திலும் | 1 ஆம் இடம் | 300+சுழற் பரிசு |
| ,, ,, | 2 ஆம் ,, | 200+சான்றிதழ் |
| ,, ,, | 3 ஆம் ,, | 100+சான்றிதழ் |
| ,, ,, | | 25 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் |
| 4 பாடத்தில் | 1ஆவது (கணிதம்) பரிசு | 500 +P S கேடயம் |
| 4 ,, | 1 ஆவது [உயிரியல்] ,, | 500+பத்மா கேடயம் |

A/L 87 பரீட்சையின் பரிசில்களும் 6-7-88 மாலை வழங்கப்படும்.

நிலையங்கள் அமையும் இடங்கள்.

| | |
|---|---|
| உடுப்பிட்டி: | வெக்டர் கணித நிலையம் (வேலாயுத பவனம்) |
| நெல்லியடி: | கிளாஸ்கோ கல்வி நிலையம் விக்கினேஸ்வர றோட் |
| : | பௌதிக ஆசிரியர் வைத்தி நிலையம் |
| சுன்னாகம்: | வினல்ஸ் கல்வி நிலையம் K K S றோட் |
| தெல்லிப்பழை: | காசி விநாயகர் விஞ்ஞான கணித நிலையம் |
| சாவகச்சேரி: | வி ரங்கட்டு சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் புத்தகசாலை |
| யாழ்ப்பாணம்: | சகல முன்னணி A/L கல்வி நிலையங்கள் |

● புதிய விண்ணப்பங்கள் பரீட்சையின் முதல் நாள் மேற்படி நிலையங்களில்நேரடியாக விண்ணப்பித்து பரீட்சை எழுதலாம். [C-5448]

---

கொட்டகை நிறைந்த காட்சிகள்
2ஆவது வாரமாக
ராஜா, யாழ்ப்பாணம் தினசரி: 10.30, 2-30
நடிப்புச் சக்கரவர்த்தி சத்தியராஜ், மோகன், ஜெய்சங்கர். நளினி, அனுராதா, ஜெயமாலினி, ஜோதிலட்சுமி
நடித்த

## ★ 24 மணி நேரம் ★

(கலர்)
தொடக்கம் முதல் முடியும் வரை விறுவிறுப்பான காட்சிகள். (4256)

---

## அரையாண்டு நினைவஞ்சலி



### அமரர் கார்த்திகேசு

[நல்லவர் நினைவு என்றென்றும் நிலைத்திருக்கும்]
மலர்வு: 14 - 02 - 1938
உதிர்வு: 13 - 12 - 1987

அன்பின் சிகரமே!
மாதங்கள் துரிதமாய்க் கடந்தாலும்
மனதில் கொண்ட துயரம் குறையவில்லையையா!
மாசற்ற தீபமே! மங்காத ஒளியே!
மகிழ்வுடன் எம்மை வாழவைத்த
மாணிக்கமே
ஆறுதிங்கள் கடந்தாலும் உங்கள்
அன்பு நினைவலைகளை நாங்கள்
ஆண்டாண்டு மறக்க மாட்டோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆறுவது
மாதத்திலும் நினைவு கூரும்.

மனைவி - பிள்ளைகள்: ஜீவானந்தன், கருணாநந்தன்.
இல. 157, காலி வீதி.
வெள்ளவத்தை கொழும்பு - 6 (4429)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமலையைச் சேர்ந்த
திருமதி
இராஜேஸ்வரி - வேதநாயகம்
(இழந்திலங்கை கன்னிப்படைப்பு ''தென்றலும் புயலும்'' திரைப்பட உரிமையாளர்)

படைப்பு: 28 - 10 - 1950
அழிப்பு 13 - 05 - 1988

பெண்ணென்று மூலையிலே முடங்கிக் கிடக்காமல் மண் மீது பணியிலே பங்களித்த மங்கையுன்னை வன்பழி ஏன் சுமக்கிப் பொல்லாப் பாவியர்கள் உன்வழி பறித்துன் னுயிர் தனைப் பறித்தனரே.

அன்னாரின் ஆத்மசாந்திக்காய் வேண்டிநிற்கும்
கணவன் பிள்ளைகள்,
தந்தை, தாய், சகோதரர்கள்,
உறவினர்கள் (4436)

---

## STENOGRAPHER

Leading business establishment situated in Jaffna town requires the services of an experienced English Stenographer with an excellant command of the English Language.

Experience in Secretarial work is an advantage.

Apply before 20 th June 88
C/O Uthayan 230,
2 nd Lane Power House Road,
Jaffna.
(C. 5436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சாத் தீவு உப்பளத்தில் மீண்டும் உப்பு உற்பத்தி

யாழ்ப்பாணம் ஜூன் 13

ஒரு வருடகால இடைவெளியின் பின்னர் குறிஞ்சாதீவு உப்பளத்தில் மீண்டும் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய உப்புக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திரு எஸ் வேலாயுதபிள்ளை உப்பு உற்பத்தியை நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இது சம்பந்தமான வைபவம் குறிஞ்சாத்தீவு உப்பள ஊழியர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் உள்ள உப்பளங்களில் குறிஞ்சாத்தீவு உப்பளம் நவீன முறையில் அமைக்கப்பட்டது ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

உப்பள உற்பத்தி முகாமையாளர் திரு ஏ சே தங்கராஜா உற்பத்தித் திட்டம் பற்றி உதயன் செய்தியாளரிடம் சொன்னதாவது:

இராணுவ நடவடிக்கைகள், இயந்திர சாதனங்கள் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு ஆகியன காரணமாக 1987 ஆம் ஆண்டில் ஆனையிறவு உப்பளத்தில் மட்டும் 24 ஆயிரம் தொன் உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த ஆண்டில் குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு உப்பளங்களில் 40 ஆயிரம் தொன் உப்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977 தொடக்கம் 1985 வரை 1 லட்சத்து 47 ஆயிரம் தொன் உப்பு இந்த இரண்டு உப்பளங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த உப்பு காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக சம்பியா, மொம்பாஸா, பங்களாதேஷ் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

உலக வங்கி வழங்கிய 94 லட்சம் ரூபா நிதி உதவியைப் பயன்படுத்தி இந்த உப்பளங்கள் புனரமைக்கப்பட உள்ளன அதன் பின்னர் உற்பத்தி ஆண்டுக்குக் குறைந்தது 70 ஆயிரம் தொன்னை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இப்படி திரு தங்கராசா தெரிவித்தார்

(ஒ-எ)

## இருமாடிக் கட்டடம்

மாவிட்டபுரம் ஜூன் 13

இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்துக்கு இரு மாடிக் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுக்க 'நோராட் ஸ்தாபனம்' முன்வந்துள்ளது

அண்மைக்கால அசம்பாவிதங்களால் இப்பாடசாலையின் கட்டடங்கள், தளபாடங்கள் முற்றாகச் சேதமடைந்திருந்தன.

(இ-90)

## ஆதீனத்தின் தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை தியான வகுப்புகள் நடைபெறவுள்ளன

இந்த வகுப்புகளை ஸ்ரீ சிதானந்த யோகி நடத்துவார். (அ சி)

## வேலணைக்கு ரூ. 3 1/4 லட்சம்

வேலணை ஜூன். 13

செவன சரண 10 கோடி மானியத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு வீடமைப்பு மானியமாக 3 லட்சத்து 32 ஆயிரம் ரூபா வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் வழங்கப்படும் இந்த மானியம் மூலம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 66 ஏழைக் குடும்பங்கள் நன்மை அடைய இருக்கின்றன.

இந்த மானியம் குடும்பத்திற்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் (இ-167)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்தவைத்தியப் பகுதியிற் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1988-06-27ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 250/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களைப் இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்



## புற்று நோய் விடுதியின் கூரை வேலைகளும் பூர்த்தியாகி விட்டன

யாழ்ப்பாணம் ஜூன். 13

தெல்லிப்பளையில் கட்டப்பட்டு வரும் புற்று நோயாளர் விடுதியின் கூரை வேலைகள் முடிந்து விட்டன.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு ஒன்று உண்டு ஆனால் அது நிபுணர்கள் தட்டுப்பாடு காரணமாக இன்னும் சரிவர இயங்கத் தொடங்கவில்லை.

புற்று நோய்க்கு ஆளானவர்கள், நோயைக் குணப்படுத்த முடியாத நிலையில் கடைசிக் காலத்தில் அவலப்படக்கூடும். அவ்வாறானவர்கள் சௌகரியமாகக் காலத்தைக் கழிக்க உதவும் வகையில் தெல்லிப்பளையில் வடமாகாண புற்றுநோய்ச் சங்கம் புற்று நோயாளர் விடுதி, ஒன்றை நிர்மாணித்து வருகிறது

ஊரெழுவைச் சேர்ந்த கொடை வள்ளல் திரு த. தம்பிராசா நன்கொடையாக வழங்கிய காணியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

இலங்கை வாழ், வெளிநாடு வாழ் அன்பர்கள் வழங்கிய நிதி உதவிகளைக் கொண்டே இக் கட்டடம் கட்டப்பட்டதாகக் கூறி அவர்களுக்கு நன்றி தெரிவித்தார் சங்கத் தலைவர் டாக்டர். மா. ஜெகநாதன்

கூரை வேலைகள் முடிந்து ஏனைய வேலைகளைப் பணமுடை காரணமாகச் செய்து முடிக்கவில்லை என்றும், அன்பர்கள் உதவி செய்தால் சம்பூர்ணமாகப் பூர்த்தி செய்து நோயாளர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டட வேலைகள் பூர்த்தியாகி ஏனைய வசதிகளும் செய்யப்பட்டால அங்கு 25 முதல் 30 நோயாளர்களை வைத்து பராமரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த தர்மகைங்கரியத்துக்கு உதவ விரும்பும் அன்பர்கள் தலைவர், வடமாகாணப் புற்று நோயாளர் சங்கம், 383, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தமது காசோலைகளை அனுப்பி உதவ முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

புற்றுநோய் விடுதிக் கட்டடம் கூரை வேலைகளும் பூர்த்தியாகிக் காட்சியளிப்பதை மேலே உள்ள படத்தில் காணலாம். (அ)

## படம் பிடிக்க ராய்ட்டர் படப்பிடிப்பாளருக்கு பொலீஸார் தடை!

கொழும்பு, ஜூன் 13

தென் மாகாணசபைத் தேர்தல் தினத்தன்று மாத்தறைக்குச் சென்றிருந்த "ராய்ட்டர்" செய்தி ஸ்தாபனத்தின் படப்பிடிப்பாளரை படங்களை எடுக்க விடாது பொலிஸார் தடுத்தனர்

அவரின் இரண்டு கமராக்களில் இருந்த பிலிம் சுருள்களைக் கைப்பற்றிய பொலிஸார், படங்கள் எடுக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவித்தனர்.

மாத்தறையில் மக்கள் விடுதலை முன்னணியின் சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்ததைக் கண்டதாக ராய்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

"முதலாவதாக வாக்களிப்பவரும் அவரின் குடும்பமும் சுட்டுக் கொலைப்படுவர்" என்று படிச் சுவரொட்டியில் எழுதப்பட்டிருந்தது

[ஓ-எ]

## இவர்கள் கடமை ஏற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமராட்சியில் புதிதாக நியமனம் பெற்ற கஷ்டப் பிரதேச கணித, விஞ்ஞான ஆசிரியர்களில் 67 பேரில் 63 பேர் தாது கடமையைப் பொறுப் பேற்றனர்

இதே வேளையில் எஞ்சிய 4 பேர் இன்னமும் யாழ் கல்வித் திணைக்களத்தில் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தாமதமின்றி தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும் படியும், தாமதிக்கும் பட்சத்தில் நியமனங்கள் ரத்துச் செய்யப்படும் என்றும் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-9]

## மட்டக்களப்பில் இருவர் கொலை

மட்டக்களப்பு ஜூன், 13

மட்டக்களப்பில் கண்ணகி அம்மன் ஆலயம் சென்று திரும்பிய [illegible] வீதி வாசியான ஏ சுந்தரன் (26 வயது) ஆலய சுற்று வளவில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவ எதிரொலியாக மறுநாள் இருதயபுரம் வாசியான எஸ் அரியராசம் (27 வயது) என்ற இளைஞர் சந்தையில் பகல் நேரம் கடத்திச் செல்லப்பட்டு பிரதான வீதியில் அதே பாணியில் வெட்டிக் கொலைப்பட்டார்.

(இ-21)

## காரைநகர் பீச்சில் முகாம்

காரைநகர் கசூரினா பீச்சில் இந்திய அமைதி காக்கும் படையினரின் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இம் முகாம் அமைக்கப்பட்டதின் பின் [illegible] கரைப்பகுதி [illegible] அடிக்கடி தீவிர சோதனைகள் [illegible]

[illegible] வளங்களில் இருந்து [illegible] வெளிச்சக் குண்டுகள் அடிப்பதும் "பரா லைட்" அடிப்பதும் சாதாரண நிகழ்ச்சிகளாகி வருகின்றன. [இ-73]


## கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

### 1988 ம் ஆண்டு முறைசாராக் கல்விப் பிரிவுகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான

# விண்ணப்பம் கோரல்

கீழே காட்டப்பட்டுள்ள, அட்டவணையின் பிரகாரம் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன பயிற்சி பெற விரும்பும் பாடசாலையை விட்டு விலகிய, வன்செயலால் பாதிக்கப்பட்ட வேலை, வாய்ப்பற்ற, சுயவேலைவாய்ப்பைத் தேட விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் எப்பயிற்சிக்கும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்கள் அவ்வப் பாடசாலை அதிபர்களுக்கு 1988-6-15 ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பதாரிகள், தனது முழுப்பெயர் விலாசம், பிறந்த திகதி, பயிற்சி பெற விரும்பும் பாடநெறி, கல்வித்தகமை, கற்ற பாடசாலை, பெற்றாரின் கையொப்பம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக விண்ணப்பம் அமையவேண்டும். ஏதாவது ஒரு பாடநெறிக்கு மட்டுமே கற்க அனுமதிக்கப்படும், பயிற்சிகள் 1988 டிசம்பர் மாதம் முடிவுறும். பயிற்சி முடிவில் பொதுப் பரீட்சையில் சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்,

**தகைமைகள்:**

1. ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு, க, பொ,த, தரத்தில் மொழி கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் ஒரே தரத்தில் சித்தி (ஆங்கிலம் சி தரம்)
2. படவரைஞர், மொழி, கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் க. பொ. த- தர சித்தி.
3. வானொலி பேணல், விஞ்ஞானம் உட்பட மோட்டார் றீவைண்டிங் க. பொ. த. சித்தி.
4. ஏனைய பாடநெறிகள், 8 ம் தரச்சித்தியடைந்திருக்க வேண்டும்.
5. தமிழ் தட்டச்சு - சுருக்கெழுத்து - க. பொ. த. சித்தி.

**பயிற்சி அளிக்கும் பாடசாலைகளும் - பாடநெறிகளும்**


1. யா/தேவரையாளி இந்துக் கல்லூரி: உடையமைத்தல், மோட்டார் பொறிததொழில, விட்டு மின் இணைப்பு, மரவேலை
2. யா/நெல்லியடி ம. ம. வி: ஆங்கில தட்டச்சு
3. யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி: வீட்டு மின்னிணைப்பு, மின் ஒட்டு வேலை, வானொலி பேணல்
4. யா/சாவகச்சேரி சென் திரேசா ம வி: உடையமைத்தல்.
5. யா/வேம்படி மகளிர் கல்லூரி: ஆங்கில தட்டச்சு, ஹோட்டல் முகாமைத்துவம் (பெண்கள் மட்டும்)
6. வைத்தீஸ்வர வித்தியாலயம்: வானொலி பேணல், மின் உபகரண உற்பத்தித் தொழில்: மோட்டார் றீவைண்டிங்.
7. யா/கனகரெத்தினம் ம. ம. வி: ஆங்கில தட்டச்சு, தமிழ் தட்டச்சு, மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல
8. இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்: மோட்டார் பொறித் தொழில், ஒட்டோ எலெக்ரிக்கல்
9. மானிப்பாய் இந்துக்கல்லூரி படவரைஞர்: ஆங்கில தட்டச்சு.
10. இராமநாதன் கல்லூரி: ஹோட்டல் முகாமைத்துவம் (பெண்கள் மட்டும்)
11. இணுவில் சைவ மகாஜன ம. வி: வீட்டு மின்னிணைப்பு.
12. இணுவில் சைவப்பிரகாச வித்தி: உடையமைத்தல்
13. அருணோதயக் கல்லூரி: உடையமைத்தல், ஆங்கில தட்டச்சு
14. பல்லாசம்: ஹோட்டல் முகாமைத்துவம் (இருபாலாரும்)
15. விக்ரோறியாக் கல்லூரி; ஆங்கிலத் தட்டச்சு, உலோக கடைச்சல்வேலை, தோற்பொருளுற்பத்தி
16. கலாநிதி தியாகராஜா ம. ம வி: காரைநகர்: உடையமைத்தல்.
17. யாழ்ரன் கல்லூரி: படவரைஞர்.
18. வட்டு, இந்துக்கல்லூரி, உடையமைத்தல்.
19. வட்டு, திருஞானசம்பந்தர் வித்தி: உடையமைத்தல்.
20. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம ம வி., ஆங்கிலத் தட்டச்சு, விட்டு மின்னிணைப்பு, மின் ஒட்டு வேலை, உடையமைத்தல்.
21. நயினாதீவு ம. வி. உடையமைத்தல்;
22. ஹாட்லிக் கல்லூரி, ஆங்கிலத்தட்டச்சு, மரவேலை, உடையமைத்தல், மின்னொட்டு வேலை.
23. கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி: மின்சார வேலை.
24. ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி: மேசன் வேலை
25. நடேஸ்வராக் கல்லூரி: மேசன் வேலை.
26. மயிலணி ம. வி: மோட்டார் பொறித் தொழில்
27. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி: புத்தகம் கட்டுதலும் காகிதப் பொருள் உற்பத்தியும்.
28. யா/மத்திய கல்லூரி, மரச்சிற்ப வேலை, மோட்டார் றிவைண்டிங்
29. சென்ஜேம்ஸ் ம. வி., யாழ்ப்பாணம்: மரவேலை.
30. பரு. மெதடிஸ்த பெண்கள் பாடசாலை - தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து உடையமைத்தல்.
31. பரு. வேலாயுதம் ம. வி. வானொலிபேணல்

கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

[C 5428]



## காணவில்லை



**திருநாவுக்கரசு விவேகானந்தன்**

மேற்கூறப்பட்ட இவர் கடந்த 15-5-88 ஆம் திகதி பருத்தித்துறைக்குச் சென்றவர் அன்றிலிருந்து இன்று வரை வீடு திரும்பவில்லை. இவரின் குடும்பத்தவர்கள் மிகுந்த கவலையுடன் இருக்கின்றார்கள். இவர் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

N. திருநாவுக்கரசு
10 வட்டாரம்,
புங்குடுதீவு.

(4270)



## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா - குவைத்

**OPEN VISA** (25 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

சவூதி அரேபியா Farmers

சம்பளம் 500 + 100
ஒப்பந்தம் 3வருடம் [10 நாட்களுக்குள் பயணம்]

சவூதி அரேபியா

றெயில்வே கிளீனேர்ஸ்
பாடசாலை கிளீனேர்ஸ்
எயர் போர்ட் கிளீனேர்ஸ்
சம்பளம் 350 + 100
சாரதி H V 600 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்

குவைத் -

ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
இன்ர நாஷனல் கிளீனேர்ஸ்
சம்பளம் 30 K. D
ஒப்பந்தம் 2 வருடங்கள்

சவூதிக்குப் போக கடவுச்சீட்டு தந்தவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது
காரியாலயம் எல்லா நாட்களிலும் திறக்கப்படும்.

தொடர்பு:

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
புகையிரதநிலைய வீதி
சுன்னாகம்.

கிளை இல 1

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
பயிலங்காடு,
ஏழாலை

(C-5432)

சென்ற வாரம் எங்கள் முகவர் மூலம் சென்றவர்களின் விபரங்கள்:

### சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| 1 | S. [illegible] | [illegible] |
| 2. | விஸ்வரத்தினம் | [illegible] |
| 3 | A யோகராசா | பயிலங்காடு |
| 4 | T அமிர்தலிங்கம் | பயிலங்காடு |
| 5 | N ஞானசேகரம் | தெல்லிப்பளை |
| 6 | P. வரதராசா | வசாவிளான் |
| 7 | I [illegible] | உடுவில் |
| 8 | A நகுலேஸ்வரன் | உரும்பிராய் |
| 9 | M [illegible] | அச்சுவேலி |
| 10 | ஜெயரத்தினம் | ஏழாலை |
| 11 | M [illegible] | தெல்லிப்பளை |
| 12 | M [illegible] | [illegible] |
| 13 | [illegible] | ஊரெழு |
| 14 | கிருஷ்ணதாஸ் | [illegible] |
| 15 | ஜெகதீஸ்வரன் | உடுவில் |
| 16 | N தேவராசா | [illegible] |
| 17 | கணேசலிங்கம் | ஏழாலை |
| 18. | யேசுதாஸ் | யாழ்ப்பாணம் |
| 19 | [illegible] | வசாவிளான் |
| 20 | விமலகாந்தன் | சுன்னாகம் |
| 21 | M [illegible] | உரும்பிராய் |
| 22 | M K. [illegible] | கோப்பாய் |

(C-5433)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
9 - 9 - 1953

மறைவு:
26 - 5 - 1987

செல்வன் சோமசுந்தரக்குருக்கள்
ஏகாம்பரநாதசர்மா
சித்தங்கேணி (பாப்பா ஐயா)

திதி: 13 - 6 - 88

உழைப்பாலும், குணத்தாலும் உயர்ந்து வரும் வேளையில் சதுபகே புவனேஸ்வரி அம்பன் ஆல (பொம்பர்) தாக்குதலில் அகப்பட்டு, உன் பிரிவால் வாடும்,

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனி சித்தி
சித்தப்பா மாமன்மார் மாமிமார்,
நண்பர்கள்

எல்லோரும் உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
சித்தங்கேணி [4263]


# மந்திகை ஆஸ்பத்திரியில்

## டாக்டர்கள், தாதிகள் பற்றாக்குறை

### சிகிச்சைக்கு வரும் நோயாளர் ஏமாற்றத்துடன் திரும்பும் அவலம்

வடமராட்சி ஜூன் 13

மந்திகை ஆஸ்பத்திரியில் டாக்டர்கள், தாதிமார் பற்றாக்குறை நிலவுகிறது.

சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் மணிக்கணக்கில் காவல் நின்றும் சிலவேளை ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

வைத்திய அதிகாரி பல தடவை மேலிடத்துக்கு இது குறித்து எடுத்துக்கூறியும் பயன் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சியில் மட்டுமல்ல, தென்மராட்சி, அச்சுவேலி போன்ற இடங்களுக்கும் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையே பிரதான வைத்தியசாலையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-160)

குழமுனை அலம்பில் பகுதிகளிலிருந்து வெளியேறி

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## சர்வோதய உதவி கிடைத்தது

வவுனியா, ஜூன் 13

இந்திய அமைதிப் படையினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளை அடுத்து குமுழமுனை அலம்பில் பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு சர்வோதய இயக்கத்தினர் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

முள்ளியவளை, தண்ணீரூற்று, சணுக்கேணி பகுதிகளில் இக்குடும்பங்கள் தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இதேபோல புளியங்குளம், கூழா முறிப்பு, கருவேலன் கண்டல் ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளையில், கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் படையினரின் நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் விவரங்களைத் திரட்டுவதிலும் சர்வோதயத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திரு. சி. கலைச்செல்வன் தெரிவித்தார்.

(இ-164)

## இப்படியும் நடக்கிறது

கிளிநொச்சி ஜூன் 13

பெற்றபிள்ளையை அடித்துக் கொன்றார் என்று கூறப்படும் தந்தை சடலத்தை பசளைப்பை ஒன்றில் போட்டு வளவில் புதைத்ததுமன்றி புதைகுழியின் மேல்வாழையும் நட்டாராம்.

இச் சம்பவம் கிளிநொச்சி பொலீஸ் வட்டாரத்திலுள்ள பாரதிபுரம் என்னும் இடத்தில் நடைபெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

பாரதிபுரத்தில் உள்ள குடும்பம் ஒன்றில் நான்கு பிள்ளைகளும் தந்தையும் வசித்து வந்தனர்.

இப்பிள்ளைகளின் தாய் ஏற்கனவே நசுஞ்சு(?) அருந்தி தற்கொலை செய்திருந்தார்.

இதனால் தந்தையே பிள்ளைகளைக் கவனித்து வந்தார்.

சம்பவதினம் தந்தை வற்றாப்பளை அம்மன் கோவிலுக்கு போய் விட்டு வீடு திரும்பினர். பிள்ளைகளுக்கு சோறு குழைத்து கையில் கொடுத்தார். கையில் சோற்றுக் கவளத்தை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த பிள்ளைகளில் 3 வயது பெண்பிள்ளை சோற்றுக் கவளத்தைக் கைதவற விட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த தந்தை பிள்ளைக்கு எதிர்பாராத விதமாக முதுகில் அடித்ததால் பிள்ளை சோர்வுற்று நிலத்தில் விழுந்ததாவும், உடனடியாக பிள்ளைக்கு தேநீர் பருக்கி, நீர்தெளித்தும் பிள்ளை மயக்கம் தெளியாமல் இறந்து விட்டதாக சவும் தெரிவிக்கப்படுகிறது.

எவருக்கும் தெரியாமல் இறந்த பிள்ளையின் சடலத்தை பசளைப்பை ஒன்றில் போட்டு தமது வளவில் புதைத்துவிட்டு மேலே வாழைக்குட்டியையும் நட்டாராம்.

விடயம் சம்பந்தப்பட்டவரின் மற்றொரு பிள்ளை மூலம் சில தினங்களுக்குப் பின் தெரியவரவே அயலவர்கள் இந்தியராணுவத்திற்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியதுடன் இந்தசிறுமியின் சடலத்தையும் மீட்டெடுத்தனர்.

அதை அடுத்து பொதுமக்களின் பலத்த தாக்குதலுக்கும், ராணுவத்தினரின் கண்டிப்புக்கும் ஆளாகினார்.

இளைஞர் குழு ஒன்று இவ் விடயம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்தது.

(ஓ. 76)

## செல்லையா இல்லம் முதலிடம்

... ஜூன் 3 கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் செல்லையா இல்லம் முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே பீற்றேர் இல்லம், சண்முகநாதன் இல்லம் என்பன பெற்றுக்கொண்டன.

அணிநடை போட்டியில் நவரத்தினராஜா இல்லம் முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

விளையாட்டுப்போட்டியில் தலைமை வகித்துப் பேசிய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் தமது உரையில் அண்மைய வன்செயலின் போது பாடசாலைக்கு சொந்தமான வெற்றிக் கேடயங்கள், வெற்றிக் கிண்ணங்கள் என்பன காணாமற்போய் விட்டன என்று தெரிவித்தார்.

(இ-72)

## கிளிநொச்சியில் மெய்வல்லுநர் போட்டி

பூநகரி, ஜூன். 13

கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி பூநகரி மகா வித்தியாலய மைதானத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு செ. அமிர்தலிங்கம் கௌரவ விருந்தினராக விளையாட்டு அமைச்சு பிரதிப்பணிப்பாளர் திரு எஸ். மரியதாஸ் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கச்சேரி கணக்காளர் திரு. எஸ். வீரசிங்கம் விளையாட்டு அதிகாரி திரு. ஏ. எஸ். குணரத்தினம் மற்றும் திரு ந. பாலசுப்ரமணியம், பொ. தங்கராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

## அந்தோனியார் பெருநாள்

சுன்னாகம் ஜூன் 13

இன்று சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் புனித அந்தோனியார் பெருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

(இ-27)


புதிய தொழில் பயிற்சி நெறிகள்

Radio T. V. & Deck
Motor Winding
Electrical Wiring

ஆரம்பம்: 15-6-88

பதிவுகட்கு:-


NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St Peters Lane,
Hospital Road,
JAFFNA.

(C-5435)



## அந்தியேட்டி அழைப்பிதழ்

முடி. கதிரவேலு



13-06-88 இன்று இடைக்காடு இல்லத்தில் நிகழும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரிகைகளிலும் மகேஸ்வர பூசையிலும் தங்களை வரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்

தாயார், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்.

3-ம் யூனிட், இல. 318,
யோகபுரம். [4268]



கொம்பியூட்டர் பயிற்சி

மீண்டும் யாழ்நகரில்!

Diploma in Data Processing
&
Computer Programming
in
BASIC & COBOL
Languages Courses இற்கான

புதிய பிரிவுகள்:

பிரிவு 1 : 18-06 988 [9 30 a m.]
பிரிவு 2 : 25- 6-19 8 [2.00 p.m.]

★ Prac ic l ... புதிய IBM Sup /XT Compute ... Comput ... File Handli g Proj ct Work ... BBC Ba ic 2 ... G oup Ce tifi ates ...

★ ... B ... il Handli g, P oj ct, G a hc ... 1 B ... Computer ... ec al Tr in ng ... Trai- n n C ti ic ...

★ ... Programme ... IBM WANG Comput ... rain e Pr gramm rs ...

★ ... 4m / ...

Administrative Office;

IDP

Institute of Data Processing

342, K K S Road சிவன் கோவிலடி
யாழ்ப்பாணம்.

தெல்லிப்பளை கிளையிலும் கரவெட்டி கிளையிலும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

(C /5423)



## 181வதுநாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



அன்னையின் மடியில் 29-11-1923
ஆண்டவன் அடியில் 19-12-1987

அமரர் ஐயம்பிள்ளை ஆறுமுகம்

ஊர் மக்கள் போற்றிநிற்க உத்தமராக வாழ்ந்து எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் சுடர்விட்டு எரிந்து எம்மையெல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே! சிவிக்(?) ... காலனவன் செயலினாலே கணப்பொழுதில் பிரிந்துவிட்ட எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 13-6-88 இன்று இந்தியாவில் இராமேஸ்வரத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்,
மனைவி மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் சகோதரர்கள், சகோதரிகள்,
வேதீஸ்வரபவனம் உறவினர்கள்.
நெடுந்தீவு-1



## ஈராண்டு நினைவு அஞ்சலி



இராமசாமி சண்முகநாதன்
[தபால் ஊழியர் கிளிநொச்சி]

தாயின் மடியில் 1953 - 10 - 26
மண்ணின் மடியில் 1986 - 6 - 6

எங்கள் இதயத்தில் என்றும் கொலுவிருக்கும் அன்புத் தெய்வமே, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது எங்களை தீராத துன்பத்தில் மூழ்கவைத்து நீங்கள் மறைந்து ஈராண்டு காலம்நிறைவு பெறும் இந்நாளில், நாம் ஆருத காதலொடு அஞ்சலி செலுத்துகிறோம்

மனைவி, மகன்,
பெற்றோர்,
உற்றார்,
உறவினர்,
நண்பர்கள்.
ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (4131)



டேட்டாசெட்
(DATASET)

உருக்குத் தளபாடங்கள் (Steel Furniture)

★ எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு
★ பல வருட அனுபவமும் செயற்திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை
★ மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை

உங்களுக்கு — உங்கள் அலுவகத்திற்கு —
உங்கள் வீட்டுப்பாவனைக்கு ஏற்ற அனைத்து
உருக்குத் தளபாடங்கள்

● வாட்ரோப்ஸ் (Wardrobes) ● மேசைகள்
● கபினேட் (Filing Cabinet) ● அலுமாரிகள்
● காசுப்பெட்டிகள் (Cash Box)
மற்றும்
● தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்.

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்து பார்வையிடலாம்

தரமானதும் விலை மதிப்பும் உள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு நல்குவீர்!

ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
OFFICE EQUIPMENT LTD.,

கிளை அலுவலகம்:
45, பிரப்பங்குளம் வீதி,
(off K. K. S. ROAD)
யாழ்ப்பாணம்.

(மனோகரா சந்தியிலிருந்து 150 யார்) (C 5417)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து

**பொருள்:**
வலிமை குறைந்தவர், தம்மைச் சார்ந்துள்ளவர் நடுங்குவதற்காகத் தாம் அஞ்சி, வேண்டியது கிடைக்குமானால் வலிமை மிக்கவரைப் பணிந்தும் ஏற்றுக்கொள்வர்.


# உதயன்

உண்மை - விழிப்பு - நடுநிலை

இல. 228/3 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23805, 22078
13-06-1988 த.பெ. இல. 88


## மகிழ்ச்சி தரும் மனமாற்றம்

ஈழத் தமிழ் மாணவர்மீது விதிக்கப்பட்ட கல்விக் கதவடைப்பை ஒரு வருட காலத்துக்கு ஒத்திவைப்பது என்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கமோ, அல்லது கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகமோ இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இதுவரை உத்தியோகபூர்வமான அறிவித்தல் எதையும் செய்யவில்லை.

ஆனால், அமைச்சர் தொண்டமானின் அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே, கடந்த ஏப்ரல் மாதத்தில் அறிவிக்கப்பட்ட, ஈழத் தமிழ் மாணவர் மீதான கல்விக் கதவடைப்பை ஒருவருட காலத்திற்கு நீக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டுள்ளது.

அந்தத் தகவல் மெய்த்துவிட வேண்டும். நடுவில் முட்டுக்கட்டை எதுவுமின்றி செயல் வடிவம் பெறவேண்டும். இடை நடுவில் பாதிக்கப்பட இருந்த ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எங்களதும், எல்லோரதும் விருப்பமாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் ஈழத் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்கு, முன்னேற்றத்துக்குப் போட்ட முட்டுக்கட்டை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

அதே உதாரணத்தை இந்திய மத்திய அரசும் பின்பற்றப்போகிறதா என்ற கேள்வி ஈழத் தமிழர் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருந்தது. அரசியல் நெருக்குதலைக் கொடுப்பதற்காகத்தான் கல்வியிலே கை வைக்கப்பட்டதோ என்றும் அவர்கள் சந்தேகப்பட்டனர். அரசியல் ரீதியில் ஈழத்தமிழர் நலனில் அக்கறை கொண்டிருப்பதாக் கூறும் இந்தியா, ஏன் தமிழ் மாணவர் கல்வியில் கை வைக்க வேண்டும் என்ற கேள்வியும் தமிழ் மக்கள் மனதில் எழுந்து உறுத்தியது.

அந்தச் சந்தேகங்கள், கேள்விகள் என்பவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல இந்திய மத்திய அரசு மனம் மாறியிருப்பது மகிழ்ச்சி தருவதாகும்.

தமிழ் மாணவருக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை எடுத்துக்கூறி விடாப்பிடியாக நின்று நியாயத்தை எடுத்துக்கூறி இந்திய அரச அதிகாரிகளை மனம் மாற வைத்த அமைச்சர் தொண்டமானுக்கும் நன்றி கூற வேண்டும்.

கல்விக்கதவடைப்பு நீக்கம் ஒரு வருடத்தோடு நிற்காமல் மேலும் சில வருடங்களுக்கு நீடித்துச் செல்ல வேண்டும்.

தமிழர்கள் உரிமை இழந்தவர்கள் என்ற நிலையிலிருந்து மீண்டு தம்மைத் தாமே ஆளுகிறார்கள் என்ற நிலை எய்தப்படும்வரை கதவடைப்பு நீக்கம் நீடிக்கப்பட வேண்டும். கல்வி வளர்ச்சிக்கான நிறைந்த, பூரணத்துவமான அதிகாரம் தமிழருக்கு வந்தால் மட்டுமே தமிழ் மாணவர்கள் கடல் கடந்து சென்று உயர் கல்வி பெற வேண்டும் என்ற நிலைமை மாற வாய்ப்பு உண்டு.

அதற்கேற்ற அரசியல் மாற்றங்களைக் கொண்டு வருவதில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு.

ஈழத் தமிழ் மாணவர் கல்விக்கதவடைப்பு விடயத்தில் நியாயத்தின் பக்கம் வந்து மனம் மாறியது போலவே—

ஈழத் தமிழர் அரசியல் விவகாரத்திலும் இந்திய, தமிழர் நலனை முன்வைத்துச் செயலாற்ற வேண்டும் என்றும்—

இப்போதைய அரசியல் ஸ்தம்பித நிலையை நீக்கி ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டும் என்று —

ஈழத்தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனையே விரும்பவும் செய்கிறார்கள்.

# ஆர்ப்பாட்டம் நடத்திவரும் பல்கலைக்கழக மாணவருக்கு பீகிங் கடும் எச்சரிக்கை!

பீகிங், ஜூன் 12
கூடுதல் ஜனநாயக உரிமை கோரி ஆர்ப்பாட்டஞ் செய்து வரும் பல்கலைக்கழக மாணவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக சீன அரசு எச்சரித்துள்ளது.

கடந்த சில தினங்களாகச் சப் பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்பு இயக்கங்களை பீகிங் நகரில் நடத்தி வருகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒருவரை ஒரு கோஷ்டி அடித்துக் கொலை செய்ததைத் தொடர்ந்தே மாணவரின் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

பின்னர் அது அரசியல் எதிர்ப்பு இயக்கமாக மாறிவிட்டது.

* கூடுதல் ஜனநாயக உரிமைகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

* சீனத் தலைமைப் பீடத்தில் நிலவும் ஊழல் களையப்பட வேண்டும்.

முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை வைத்து இப்போது சீன மாணவர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்ற சமயத்திலேயே சீன எச்சரிக்கை வெளியாகியிருக்கின்றது.

இதனிடையில் மாணவர் தலைவர்களைக் கைது செய்து சீனப் பொலீஸார் அறுவரைக் கைது செய்தனர். அவர்களில் இருவர் பெண்கள் என்று அறிவிக்கப்படுகின்றது. (•)

## வளைகுடாவில் இரண்டு கப்பல்கள் தாக்கப்பட்டன!

டெஹ்ரான் ஜூன் 12
வளைகுடாவில் இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் ஈரானின் விரைவுப் படகுகளினால் தாக்கப்பட்டன.

ஒன்று, பிரிட்டனுக்குச் சொந்தமானது. இலட்சத்து 65 ஆயிரம் தொன் எடை கொண்டது.

இரண்டாவது மேற்கு ஜேர்மனிக்குச் சொந்தமானது.

பிரிட்டிஷ் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் ஆட்சேதம் ஏற்படவில்லை.

மேற்கு ஜேர்மனியின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் ஒரு மாலுமி உயிரிழந்தார். அவர் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் என்று அறிவிக்கப்படுகிறது.

## எண்ணெய் உற்பத்தி நாடுகளின் மாநாடு ஆரம்பம்

வியன்னா, ஜூன் 12
எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் மாநாடு நேற்று வியன்னாவில் ஆரம்பமானது.

13 நாடுகளின் எண்ணெய் வள அமைச்சர்கள் இம் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். நைஜீரியாவின் எண்ணெய் வள அமைச்சர் லுக்மன் தலைமை வகிக்கின்றார்.

எண்ணெய் உற்பத்தியை ஸ்திரப்படுத்தும் திட்டம் ஒன்றை இம் மாநாடு பரிசீலனை செய்யப்பட விருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [எ]

## ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறுகிறது; சோவியத் யூனியன் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 12
அமைதி உடன்பாட்டை மீறுவதில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபடுமானால் ஆப்கானிலிருந்து சோவியத் துருப்புகள் வாபஸ் வது தாமதமாகலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வாட் ஷெவாட்நாட்ஸே நியூயோர்க்கில் வைத்து பாகிஸ்தானுக்கு இந்த எச்சரிக்கையை வெளியிட்டார். ஜெனிவாவில் செய்து கொண்ட ஆப்கன் உடன்பாட்டில் ஆப்கன் அரசும் பாகிஸ்தான் அரசும் கையெழுத்திட்டன. உத்தரவாத நாடுகளாக அமெரிக்காவும் சோவியத்யூனியனும் கையெழுத்திட்டன.

உடன்பாட்டின் படி, சென்ற 15ஆம் திகதிமுதல் சோவியத் துருப்புக்கள் தாயகம் திரும்பத்தொடங்கியிருக்கின்றன.

இதுவரை 34 ஆயிரம் துருப்புக்கள் திரும்பிவிட்டன என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆப்கன் கெரில்லாக்கள் கிளர்ச்சியை தீவிரப்படுத்தியுள்ளன.

பாகிஸ்தான் அவர்களுக்குத் தொடர்ந்து ஆயுதங்களைக் கொடுத்து உதவுகதாக ஆப்கன், சோவியத் யூனியன் ஆகியன குற்றஞ்சாட்டி வருகின்றன (எ)

வெளி உலகில்

## கறுப்பு இனத்தலைவரின் பிறந்தநாள் விழாவுக்கு நிதிசேகரிக்க இசைவிழா!
### வெள்ளை இனத்தவர் நாட்டில்!

லண்டன், ஜூன், 12
தென் ஆபிரிக்க கறுப்பு இனத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் 70 ஆவது பிறந்த தினம் அடுத்த மாதம் வருகிறது.

அதையொட்டி நேற்று லண்டனில் பெரும் இசை விழா நடந்தது.

பி.பி.சி. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒழுங்கு செய்த இவ்விழாவில் சுமார் 70 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

நிற வேற்றுமைக்கு எதிரான இயக்கத்துக்கும் தென் ஆபிரிக்காவில் உள்ள கறுப்புஇன மக்களின் குழந்தைகளின் முன்னேற்றத்துக்கும்ஆக நிதி சேகரிக்கவே பி.பி.சி. இந்த இசை விழாவை நடத்தியது.

திரு நெல்சன் மண்டேலா, கடந்த 26 ஆண்டுகளாக தென் ஆபிரிக்க அரசினால் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

பி.பி.சி.யின் இந்த நடவடிக்கையை தென் ஆபிரிக்க அரசு வன்மையாகக் கண்டித்தது.

சேர்க்கப்படும் நிதி, கறுப்பு இனப்போராளிகளுக்கு ஆயுதங்கள் வழங்கவே பயன்படுத்தப்படும் என்று தென் ஆபிரிக்க அரசு குற்றஞ் சாட்டியது.

பி.பி.சி. நிர்வாகம் இதனை வன்மையாகக் கண்டித்தது. [எ]

## பிஷப் டுட்டு மாஸ்கோ பயணம்

தென் ஆபிரிக்காவின் ஆர்ச் பிஷப் டெஸ்மண்ட் டுட்டு, தனது மனைவியுடன் மாஸ்கோ பயணமானார்.

சோவியத் யூனியனில் கிறிஸ்தவ சமயம் ஸ்தாபிக்கப்பட்ட ஆயிரமாவது ஆண்டு நிறைவையொட்டிய வைபவங்களில் கலந்து கொள்ளவே அவர் மாஸ்கோ சென்றார் என்று அறிவிக்கப்பட்டது.

இதற்கு முதல் நடந்த சம்பவம் ஒன்றில் தென் ஆபிரிக்கப் பொலீஸார் பிஷப் டுட்டுவின் மனைவியைக் கைது செய்ததாகவும், திருமதி டுட்டுகைகளில் விலங்கிடப்பட்ட நிலையில் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது.

பொலீஸார் இதனை மறுத்தனர். (எ)

## தென் ஆபிரிக்காவில் பத்திரிகை தணிக்கை கடுமையாக அமுல்

கேப்டவுன், ஜூன் 12
பத்திரிகைத் தணிக்கையை தென் ஆபிரிக்க அரசு கடுமையாக்கியிருக்கிறது.

கறுப்பு இனத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதைத் தொடர்ந்து அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

தென் ஆபிரிக்கச் சிறைகளில் வாடும் கறுப்பு இனக் குழந்தைகள் பற்றிய விவரணப் படம் ஒன்றைத் தயாரித்து பி.பி.சி. ஒளிபரப்பியது.

தணிக்கைக் கடுமையாக்கப்பட்டதற்கு இது ஒரு காரணமாகும் என்று கூறப்படுகின்றது.

இதனிடையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நீக்கஞ் செய்யப்பட்டு விட்டதாக அரசு அறிவித்துள்ளது. (எ)

# போலியோவை முற்றாக ஒழிக்க ரோட்டறியின் 5 ஆண்டுத்திட்டம்

சேவை நிறுவனங்கள் யாவற்றிலும் மூத்ததாகவும் முன்னோடியாகவும் விளங்கும் ரோட்டறி இன்று ஒரு உலக சவாலை ஏற்றிருக்கின்றது.

இந்தச் சவால் எவ்வகையானது? இவ்வுலக மக்களுக்கு என்ன நன்மை கிட்டப்போகின்றது?

வற்றை அறியுமுன் ரோட்டறி என்பது எவ்வகையான இயக்கம்; எப்படி ஆரம்பமானது என்பதைச் சற்று நோக்குவது நல்லது.

ரோட்டறி உலகெங்கும் உள்ள வர்த்தக மற்றும் உயர் தொழில் புரியும் ஆடவர்கள் இணைந்து கழகங்கள் மூலம் மக்களுக்கு மனிதாபிமான சேவை ஆற்றும் ஒரு நிறுவனம்.

உலக அமைதியையும் பனிதகுல நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டது.

இந்த நிறுவனம் அமெரிக்காவில் ஆரம்பமானது.

1905 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி சிக்காகோ நகரில் போல் ஹரிஸ் என்னும் வழக்கறிஞரால் நான்கு அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் இன்று உலகளாவ வேர் பாய்ந்து, பல நாட்டில் விழுது விட்டு பாரிய விருட்சமாக விளங்குகின்றது.

இது 161 நாடுகளில் 22 000 கழகங்களையும் 10 இலட்சம் அங்கத்தவர்களையும் தன்னகத்தே அடக்கிய மிகப் பெரிய சர்வதேச நிறுவனமாக வளர்ந்துவிட்டது.

**இலங்கையில்**

இலங்கையில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட ரோட்டறி கழகம் கொழும்புக் கழகமாகும். இது 1929 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி நிறுவப்பட்டது. எமது யாழ் ரோட்டறிக் கழகம் இலங்கையில் தோன்றிய மிகப் பழமை வாய்ந்த கழகங்களுள் ஒன்று — மூன்றாவதாக (கண்டியை அடுத்து) விளங்குகின்றது.

இக்கழகம் தோன்றியது 1941 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியாகும்.

பற்பல துறைகளிலும் பொதுமக்களுக்கு அதியுயர் முறையாக வசதியற்றோருக்கு சேவைசெய்வதில் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துள்ள இக்கழகம் பல முன்னோடியான செயற் திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கின்றது.

யாழ் பெரிய ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பகுதி முகப்பில் எழுந்து நிற்கும் ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கக் கட்டடம் இதற்கோர் உதாரணமாகும்.

மேலும் 1977 ஆம் ஆண்டு சம்பத்தரிசியார் கல்லூரியில் நடத்தப்பட்ட ... யாழ் வளாகம் – பரியோவான் கல்லூரியில் 1986 இல் நடத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டி விளையாட்டுப்போட்டி முதலியனவும் —

முக்கியமாக 1977 ஆம் 1987 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட அழிவுகளினால் அல்லற்பட்ட அகதிகள் பாதுகாப்பிலும் — மறுசீரமைப்பிலும் — பெரும் பங்களிப்புச் செய்துள்ளது இக்கழகம்.

தற்பொழுது சர்வதேச ரோட்டறி உலகளாவிய பாரிய செயற்திட்டம் ஒன்றைத் தனது சவாலாக ஏற்றுள்ளது என்றும்...

**போலியோ ஒழிப்பு**

அது போலியோ பிளஸ் திட்டமாகும்.

இதன்படி இன்னும் 5 வருடத்துக்குள் போலியோ என்னும் இளம்பிள்ளை வாதத்தை உலகில் எந்தப் பகுதியிலும் தலை தூக்காது ஒழித்துக் கட்ட வேண்டும்.

இதற்காகச் சர்வதேச ரோட்டறி மிகப் பெரிய அளவிலான நிதி சேகரிப்பை ஆரம்பித்து தற்போது 12 கோடி அமெரிக்க டொலர்களைப் பெற்று எல்லா நாடுகளுக்கும், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நன்கொடையாக அன்பளிப்புச் செய்யும் கைங்கரியத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கையும் இத்திட்டத்தின் கீழ் ஐந்து லட்சம் டாலர்களைப் பெற்றுள்ளது. அத்துடன் எங்கும் ரோட்டறிக் கழகங்கள் உள்ளனவோ அவை எல்லாம் இம் மனிதாபிமான செயற் திட்டத்தில் தங்கள் கூடிய பங்களிப்பைச் செய்யவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளன.

யாழ் ரோட்டறிக் கழகமும் இந்த தமிழ் முயற்சியை முழுமூச்சாக முன்னெடுக்க வேண்டிய ஆரம்ப வேலைகளில் சற்றே இறங்கியுள்ளது.

**ந. கருணை ஆனந்தன்**

## வண்ணை வீரமாகாளி உற்சவம்

யாழ்ப்பாணம் ஜூன்-13
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த ஐந்தாம் திகதி ஆரம்பமானது.

தொடர்ந்து 25 திருவிழாக்கள் நடைபெறும்.

28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேரோற்சவமும் 29 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தினமும் காலை 9 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் வசந்த மண்டப பூசை நடைபெறும்.

## காரைநகரில் உற்சவம்

யாழ்ப்பாணம் ஜூன் 31
காரைநகர் ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விழா இன்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## நயினை உற்சவகாலத்தில் சேதனை பயகுறிகாட்டுவானில் நடாத்துக
### அரச அதிபருக்கு வேண்டுகோள்

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் 15-06-88 இல் ஆரம்பிக்க இருப்பதால், அடியார்கள் நலன் கருதி உற்சவ காலத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினர் தங்கள் சோதனைகளை குறிகட்டுவானிலேயே நடத்த வேண்டுமென்று யாழ். அரச அதிபருக்கு திவ்விய ஜீவனசங்கத்தின் நயினைக் கிளை எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

சங்கத்தின் செயலாளர் திரு. ந. கோபாலகிருஷ்ணன் ஒப்பமிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

தற்பொழுது நடைமுறையிலிருக்கும் புங்குடுதீவு பாலத்தில் நடைபெறும் சோதனைகளின் போது அடியார்கள் மேடான வள்ளங்களில் ஏறி இறங்கும் போது ஏற்படும் கஷ்டங்கள் யாவற்றையும் குறிகட்டுவான் துறைமுகத்தில் சோதனைகளை நடத்துவதன் மூலம் நீக்க முடியும்.

நயினை உற்சவம் பற்றி யாழ் செயலகத்தில் 27-05-88 இல் நடைபெற்ற கூட்டத்திலும் மேற்படி விடயம் சம்பந்தமாக மகஜர் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் வருடாந்த மகோற்சவம் புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜூன் 13
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

புதிய சப்பரத் வெள்ளோட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதியும், தேர்த் திருவிழா 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கும், தெப்பத்திருவிழா 30 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் பகல் திருவிழா தினமும் காலை 8 மணி முதல் 1 மணி வரையும், இரவுத் திருவிழா மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

கோவிலுக்கு வரும் அடியார்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும். அடையாள அட்டை இல்லாதவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகளுடன் வர வேண்டும்.

திருவிழா உபயகாரர்களும் அடியார்களும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் விழாவைச் சிறப்புடன் செய்து முடிப்பதற்கு பூரண ஒத்துழைப்பைத் தந்துதவுமாறு வேண்டப்பட்டுள்ளார்கள்.

## அணு ஆயுதகுறைப்புக்கு பிரதமர் ராஜீவ் காந்தியின் 22 வருடத் திட்டம்!

நியூயோர்க், ஜூன் 12
அடுத்த 22 ஆண்டுகளில் அணு ஆயுதங்களை முற்றாகக் குறைப்பதற்கு வழிகாணும் திட்டம் ஒன்றைப் பிரதமர் ராஜீவ் காந்தி ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் முன்வைத்தார்.

ஆயுத பரிகரணம் பற்றிய ஐ.நா. பொதுச் சபையின் மூன்றாவது மாநாடு நடந்து கொண்டிருக்கின்றது.

இம் மாநாட்டில் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த வியாழன் பேசினார்.

அப்போது அணிசேரா இயக்க நாடுகள் சார்பில் பிரதமர் காந்தி இந்த அணு ஆயுதக் குறைப்புத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புஸ்பா நெல்லி ரசம்

ட்டமின் 'சி' சத்து நிரம்பியது.
தாகசாந்தி, பித்தம், ஒங்காளம் இவற்றை
நிவர்த்தி செய்து இரத்தத்தை
சுத்தி செய்கிறது.

1 போத்தல் விலை: ரூபா 25/-

கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
இல. 5 (76). பெரியகடை.
யாழ்ப்பாணம்.



# உதயன்

13 - 06 - 1988 திங்கழமை



## நன்றி சர்பத்

இது நரம்புத் தளர்ச்சி, சலக் கடுப்பு
மூலவியாதி போன்ற உஷ்ண வியாதிகளை
போக்கித் தாகசாந்தி தருகிறது.

1 போத்தல் விலை: ரூபா 25/-

கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
இல. 5 (76) பெரியகடை,
யாழ்ப்பாணம்.


## முக்கிய அறிவித்தல்

Uplands Farm கோழிக் குஞ்சுகளை 14-6-88இல் பெறுவதற்கு பதிவு செய்தவர்கள் சேவல்க் குஞ்சுகளை 15 ஆம் திகதியும், பேட்டுக் குஞ்சுகளை 28ஆம் திகதியும் பெற்றுக்கொள்ளவும். மின் சாரத் தடை காரணமாக இந்தத் திகதி மாற்றம்செய்ய வேண்டி ஏற்பட்டதற்கு வருந்துகிறோம்

No 9 Kandiah Lane
CHUNNAKAM
EAST.
[4275]


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) அர்ஜுன் ★ ஆஷா ராணி ★
★ "எங்களூர் நல்லவன்"

(2) பாண்டியன் ★ சுதாசந்திரன்
★ "தங்கக்கலசம்"

### எமது இன்றைய வெளியீடு

ரஜனி ★ பிரபு ★ சிதா
★ "குருசிஷ்யன்"
(THOMSUN PRINT)

என்றும் தரமான பிரதி க்கு

## குணம் வீடியோ சென்ரர்

42 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்
(5449)


## திருமந்திரச் செம்மல் யாழ். விஜயம்

'திருமந்திரச் செம்மல்' திரு. எஸ் இராமநாதன் யாழ்ப்பாணத்துக்கு இம் மாதம் 15 ஆம் திகதி விஜயம் செய்யவிருக்கிறார்

ஒரு வார காலம் திருமந்திர விளக்கச் சொற்பொழிவுகளை அவர் இங்கு நிகழ்த்தவிருக்கின்றார்.

அவரிடமிருந்து திருமந்திர விளக்கங்களை பெற விரும்புவோர் 10, திருவள்ளுவர் சாலை, ந்தா மடத்தில் உள்ள வ எம். டி ஏ அலுவலகத்துடன் தொடர்புகொள்ளு படி செய்வித்த திருக்குறள் சங்கத் தலைவரும், பொறியியலாளருமான திரு ஏ என். யோசநாதன் அறிவிக்கிறார். (இ-எ)

## நயினாதீவில்--

[1 ஆம் பக்க தொடர்ச்சி]

அனுவித்தனர்.

### 14 படகுகள் சேவையில்

இதனிடையில் இவ்வருடத் திருவிழாவை முன்னிட்டுக் குறிகட்டுவானிலிருந்து சேவையில் ஈடுபட 14 இயந்திரப் படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இப் படகுகளில் வரையறுக்கப்பட்ட பிரயாணிகளே பயணம் செய்ய முடியும். இதனை நெறிப்படுத்த வேலனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் விசேட பஸ் சேவைகளை நடாத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருவிழா நாட்களில் ஸ்ரீலங்கா கடற்படையின் சுழியோடிகளைக் கொண்ட படகொன்று பொதுமக்களிற்கு சனவெளிக்க ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் எனவும் அறியவருகிறது.

நாளை மறுதினம் புதன் கிழமை ஆரம்பமாகும் நயினை உற்சவத்திற்கு வரும் பக்தர்கள் தமது அடையாள அட்டையுடன்வரவேண்டும் அடையாள அட்டை இல்லாதவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகளுடன் வரவேண்டும்.

யாத்திரிகர்களுக்குரிய சகல வசதிகளையும் வழமைபோல் செய்வதற்கு போக்குவரத்துச் சபையினரும், மோட்டார்ப் படகு சேவையினரும் அமுதசுரபி அன்னதான சபையினர் தொண்டர் சபையினர், தாகசாந்தி நிலையத்தினர் ஆகியோரும் செய்துள்ளார்கள் என்று கோவில் அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-5)

## மன்னாரில்---

[1 ஆம் பக்க தொடர்ச்சி]

போராட்டத்தில் பங்களித்த மக்களூடாக அறியமுடிகின்றது.

இவ்வீதி மறிப்புப் போராட்டமானது வடக்கு, கிழக்கு அனைத்து மக்களினதும் உணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

இப்போராட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாகவும், பரவலாகவும் நோக்கத்திலும் நாளை 14ஆம் திகதி மன்னாரிலும், 16 ஆம் திகதி வடமராட்சியிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)


## இன்று ஆரம்பம்

### பிரத்தியேக வகுப்பு

யாழ் நகரில் முதற் தடவையாக

★ ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாகவே போதிக்கப்படும் பட்டதாரி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

**ஆண்டுகள்: 10, 11**
கணித, விஞ்ஞான பாடங்கள்

**A/L**
விலங்கியல் - இரசாயனவியல்

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
383/2, நாவலர் ஒழுங்கை
நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[4431]


## தேவை

1. காசாளர்/பில் கிளாக் (பெண்)

வயது எல்லை - 30க்கு உட்பட்டவர்
தகமை - G C. E (O/L) சித்தி
ஆங்கில அறிவு மிக அவசியம்
அனுபவம் - 2 வருடங்கள்

2. களஞ்சியப் பொறுப்பாளர் (ஆண் - பெண்)

வயது எல்லை - 40க்கு உட்பட்டவர்
தகமை - G C. E. (O/L) சித்தி
(A/L) மேலதிக தகமை
ஆங்கில அறிவு அவசியம்
அனுபவம் - 4 வருடங்கள்

தெரிவு செய்யப்படுபவர்கள் Security Deposit கட்டக்கூடியவராக இருக்கவேண்டும் யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

14, 15 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12மணி வரை நேரில் சமுகமளிக்கவும்.

ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்:
(C 5447)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சின்னையா சரவணமுத்து

(இளைப்பாறிய பிரதம தபாலதிபர்)

தோற்றம்: 13-04-19 5
மறைவு; 13-06-1986
திதி: 2 -06 1988

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து நல்வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டு மறைந்து இரு வருடங்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றுமே நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், சகோதரர் சகோதரி,
உறவினர், நண்பர்கள்

'ஸ்ரீமதி வாசா'
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.
(4434)


## ஹரனா வெண்திரையில்

10-30 2 30 4 45

கடைசி 2 தினங்கள்
மீண்டும் காண்பிக்கப்பட மாட்டா!

**Crystal Heart**

இனிய காதல் சித்திரம்--
வயது வந்தவர்கள் மட்டும்.

புதன் 15 முதல்
★ பந்தயம் ★ [புதிய வெளியீடு]
[4262]


## மரண அறிவித்தல்கள்

### அருள்திரு J J இரத்தினராஜா

அருள்திரு J J இரத்தினராஜா அவர்கள் 11-6-88 சனிக்கிழமை காலை இறைவனடி எய்தினார். அன்னார் கனகமலரது அன்புக் கணவரும், திரு. குமார் (ஆசிரியர் கிளிநொச்சி), திருமதி மாலா நேசரத்தினம் (மலேசியா), ஆனந்தன் (U K), மதி (இத்தாலி) ஆகியோரின் அருமைத் தந்தையும், ராஜி, ராஜா, ஜயந்தி, ரோனி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது இறுதி ஆராதனை முன்னர் அறிவித்தது போல் அல்லாமல் மானிப்பாய்த் தேவாலயத்தில் 15-06-88 புதன்கிழமை காலை 8 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(4278) குமார் இரத்தினராசா

### T. A. மகாதேவா

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

காரைநகர் களபூமியைச்சேர்ந்த ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் ஆறுமுகம் மகாதேவா காலமாகிவிட்டார். இவர் பொன்னம்மாவின் அன்புக்கணவரும் சரோஜினிதேவி, பத்மலோசனி (ஆசிரியை, சென் ஜோசப் கல்லூரி, திருமலை), இராஜேஸ்வரி[லண்டன்] ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவசுப்பிரமணியம் (நேரு பிரிண்டர்ஸ் - கொழும்பு), பூபாலரெட்டினம் (நீர்பாசன இலாகா, தொழில்நுட்பவியலாளர் - கந்தளாய்), ரத்தினசிங்கம் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும், காலம்சென்ற சபாரத்தினம், கனகரத்தினம், சண்முகநாதன் (மலேஷியா), டாக்டர் குமாரசுவாமி, திருமதி பூரணம் ராமலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், மயூரன், விதுஷன், ரமனுஷா, சிந்துஜா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-06-88 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் காரைநகர் களபூமியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும். [4439]

### திருமதி சதாசிவம் இராசம்மா

சரவணை பள்ளம்புலம் திருமதி சதாசிவம் இராசம்மா காலமானார். இவர் சரவணை சங்குதறையைச்சேர்ந்த காலம்சென்ற சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும், நடராசா அவர்களின் அன்புச்சகோதரியும், மகாலிங்கம் (ஆசிரியர், புனித சால்ஸ் மகாவித்தியாலயம்), சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புத்தாயும், தம்பு தனநாயகம் (Browns Company), புஷ்பரெத்தினம் ஆகியோரின் மாமியாரும் ரமணி, வனிதா, சிவமலர், குலதீபன், சிவபாலன், கிருபாகரன், தயாபரன் ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 13-06-88 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(4277) மக்கள்.

### தமிழ்செல்வி திருநாவுக்கரசு

முரசுமோட்டையைச் சேர்ந்த தமிழ்செல்வி திருநாவுக்கரசு 12-6-88 இல் அகால மரணமானார் அன்னார் திருநாவுக்கரசு, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், கலைச்செல்வன், அன்பழகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகமுத்துவின் பேத்தியாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-06-88 திங்கள் காலை 10 00 மணிக்கு முரசுமோட்டை மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா சிவபாலச்சந்திரன்
(4440)


## முன் மாதிரி பயிற்சி - பரீட்சை
## க. பொ. த. (சா.த.) யூலை - 1988

| திகதி | பாட எண் | பாடம் | நேரம் |
|---|---|---|---|
| 1988-06-14 | 02 | தமிழ் | I 8-30 - 9-15 |
| | | | II 9-30 - 2-30 |
| 1988-06 15 | 04 | ஆங்கிலம் | I 8 30 - 9-30 |
| | | | II 9 45 - 11-45 |
| 1988 06-16 | 24 | இந்து சமயம் | |
| | 26 | கிறிஸ்தவம் (றோமன் க) | I 8-30 9-30 |
| | 27 | கிறிஸ்தவம் | II 9 45 - 11-15 |
| | 28 | இஸ்லாம் | |
| 1988 06-17 | 20 | கணிதம் | I 8 30 - 9-30 |
| | | | II 9-45 - 12-15 |
| 1988-06-19 | 21 | விஞ்ஞானம் I | மு.ப. 12-45 - 1 45 |
| | | | பி.ப. 2-00 - 5-00 |
| 1988-06-20 | 22 | சுகாதாரம் | I 8-30 - 9 30 |
| | | | II 9-45 11-45 |
| 1988-06-21 | 30 | சமூகக்கல்வி | I 8-30 - 9-30 |
| | | | 9-45 - 12 45 |
| 1988 06-22 | 40 | வர்த்தகமும் கணக்கியலும் | I 8 30 - 9-30 |
| | | | II 9 45 - 1 -45 |
| | | | I 8-3 - 9-30 |
| | 10 | சித்திரம் | III 9-45 - 11-45 |
| | | | II 1-00 - 3 00 |
| | 13 | சங்கீதம் | I 8 30 - 9-30 |
| | 17 | நாட்டியம் | II 9-45 - 11-45 |
| 1988-06-23 | 50 | பரவேனி | |
| | 53 | விவசாயம் | I 8-30 - 9-30 |
| | 54 | நெசவு | II 9 45- 11-45 |
| | 57 | மனைப்பொருளியல் | |

### பின்வரும் நிறுவனங்களில் இப் பரீட்சை நடைபெறும்

1. Bond Institution - யாழ்ப்பாணம்
2. Shamrock Academy - யாழ்ப்பாணம்
3. Radiant Institute - அரியாலை
4. Keen Institute - திருநெல்வேலி
5. Alpha Institute - சுன்னாகம்
6. Higher Education Centre - சாவகச்சேரி
7. கி T ஜகசாசன் - ச்ச ய் ரோட், கொடிகாமம்
8. Modern Commerce - பருத்தித்துறை
9. திரு சிவலிங்கம் - புலோலி
10. சக்தி ரன்ஸ் - கல்வாய்
11. Maths Centre - நெல்லியடி
12. Young Rovals - நெல்லியடி
13. Royal Academy - குடத்தனை
14. Becon - உடுப்பிட்டி
15. V M K - வல்வெட்டித்துறை
16. [illegible] - ச்சுவேலி
17. Express Institute - இருபாலை
18. [illegible] - ஊரெழு
19. M i Institute - நச்சிமார் கோவிலடி
20. Peradeniya Institute - மாதகல்
21. Nilu Tuition Centre - கோண்டாவில்
22. வ ணி க் நிறுவன - சுன்னாகம்
23. Star Institute - மருதனார்மடம்
24. Unique Institutes - தெல்லிப்பழை
25. Viking Institute - காங்கேசன்துறை
26. Bond Institute - சித்தங்கேணி
27. செல்வி அ லிராணி - சுழிபுரம்
28. Valluva English Academy - பண்ணாகம்
29. National Academy - பண்டத்தரிப்பு
30. Remington - மூளாய்
31. V T.C. - வேலணை
32. திரு திருநந்தகுமார் - புங்குடுதீவு

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையை இந்நிறுவனங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்

**Examination Unit**
**Bond Institution**
**58 A, Stanley Road. Jaffna**

(4264)



வியாபாரம் பெருக ★
★ விளம்பரம் செய்க



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 13-06-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 392/2, Navalar Road, Jaffna on Monday, 13th June 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org